**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.42/2020
Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : ஜெயராமன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of October 2023.

04.10.2023

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணியாற்றி வருகிறேன். 14.12.2019ம் தேதி தேரிருவேலியிலிருந்து பரமக்குடி செல்லும் 14ம் நம்பர் பேருந்திற்கு நடத்துனராக பணியில் இருந்தேன். காலை 09.30 மணியளவில் கோடரேந்தல் வளைவு காளாங்கரை அருகே பேருந்து வந்துகொண்டிருந்தபோது நான் பேருந்திற்குள் இருந்த நபர்களுக்கு பயணச்சீட்டு கொடுத்துக்கொண்டிருந்தேன்.

2) அப்போது பேருந்து திடீரென்று நின்றுவிட்டது என்னவென்று கீழே இறங்கி பார்த்தபோது பெண்மணி ஒருவர் ரோட்டில் அடிபட்டு கிடந்தார். நான் பயணச்சீட்டு கொடுத்துக்கொண்டிருந்ததால் எதையும் கவனிக்கவில்லை. எனக்கு என்ன நடந்தது என்று தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில்

அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** கடந்த 16.12.2019 ம் தேதி காலை சுமார் 09.00 மணியளவில் TN 63 N 1469 என்ற அரசு பேருந்தை ஓட்டிச்சென்ற ஓட்டுனரான 1ம் எதிரி ஜெயக்குமார் அதிவேகமாக அரசு பேருந்தை ஓட்டினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அரசு பேருந்தை அதிவேகமாக ஓட்டி வந்து எதிரே வந்த TN 65 U 7345 என்ற பதிவு எண்கொண்ட இருசக்கர வாகனத்தின் மீது மோதினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் 1ம் எதிரி ஜெயக்குமார் என்னுடன் பணிபுரிந்த காரணத்தினால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் நேரடியாக எதுவும் பார்க்கவில்லை என்றால் சரிதான். பேருந்திலிருந்து இறங்கி சென்று பார்த்தபின்பு தான் எனக்கு சம்பவத்தை பற்றி தெரியும் என்று சொன்னால் சரிதான்.